# மெட்ரோ ரெயிலில் நிரம்பி வழிந்த மக்கள் கூட்டம்

## இன்று முதல் இலவச சேவை கிடையாது

சென்னை, பிப்.14–

சென்னையில் கடந்த 10–ந் தேதி டி.எம்.எஸ். – வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரெயில் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். அன்று முதல் நேற்று வரை மெட்ரோ ரெயில்களில் இலவசமாக பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. இதனால் மக்கள் கூட்டம் மெட்ரோ ரெயில் நிலையங்களை நோக்கி படையெடுக்க ஆரம்பித்தனர். இதையடுத்து மெட்ரோ ரெயிலில் நேற்று முன்தினம் 2 லட்சத்து 10 ஆயிரத்து 792 பேர் பயணம் செய்தனர். இந்த சோதனை ஓட்டம் வெற்றிக்ரமாக முடிந்த நிலையில் இன்று (வியாழக்கிழமை) முதல் வழக்கமான கட்டணங்களுடன் மெட்ரோ ரெயில் சேவை தொடரும் என சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.